அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 172

எனது இல. ரி.யூ.27(கொள்கை)
(1V )(11)

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1980, யூலை மாதம் 29 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க யாக்கத் தலைவர்கள் யாவர்க்கும்.

வேலை நிறுத்தம் 1980, யூலை மாதம் - தொழிற்
சமாசங்களுக்கு அனுமதிக்கப் பெற்றுள்ள வசதிகளை
மீளப் பெறுதல்.

சில பணியாளர்கள் அண்மையில் வேலை நிறுத்தத்திலீடுபட்டதன் விளைவாக மேல்வரும் நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டுமென முடிபு செய்யப் பட்டுள்ளது:-

(1) முழு நேரமும் தொழிற் சமாசப் பணியாற்றுவதற்காக விடுவிக்கப் பெற்றவர்களாகி, வேலை நிறுத்தத்திலீடுபட்டுள்ள தொழிற் சமாசங்களின் உறுப்பினர்களாகவும் விளங்கும் அனைவரையும் தமது இயல்பான பதவிகளுக்குரிய கடமைகளையாற்றுவதற்குச் சமுகமளிக்குமாறு அறிவுறுத்துக. இவ்வுத்தியோகத்தர்கள் தாம் விடுவிக்கப்பட்ட போது பணியாற்றிய நிறுவனத் தலைவர்களிடம் கடமைக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

(11) அவர்கள் முழு நேரத் தொழிற் சமாசப் பணியாற்றுவதற்காக அவர்களுக்கு அளிக்கப் பெற்றுள்ளதான அரசகருமத்துக்குரிய வண்டிகளை உபயோகித்தல், இலவசப் பயண வசதிகள் முதலியன போன்ற வசதிகளை பெற்ற பாந்த வகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மீளப்பெறுக.

(111) குறித்த வேலை நிறுத்தத்திற் பங்குபற்றிய உறுப்பினர்களைக் கொண்ட தொழிற் சமாசங்களின் அலுவலகங்கள் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்க யாக்கங்கள் ஆகியவைவற்றின் வளவுக்குள்ளிருக்குமிடத்து, அவற்றை மூடி அவற்றிற்குப் பொறியிடுக.

ஒப்பமிட்டவர்: பி. ஐ. ஞானதுங்க.
பதிற் செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.